

சென்னை, எழும்பூர் மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி மைதானத்தில் ஆசிய ஆடவர் ஹாக்கி கோப்பை சென்னை 2023 போட்டியின் இரண்டாவது நாளான நேற்று (4.8.2023) கொரியா மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கிடையே நடைபெற்ற முதல் போட்டியை நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு , மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் ஆகியோர் தொடங்கி வைத்தனர். இந்நிகழ்ச்சியில் சர்வதேச கூடைப்பந்து வீராங்கனை பத்மஸ்ரீ அனிதா பால்துரை, ஹாக்கி இந்தியா பொதுச் செயலாளர் போலா நாத் சிங் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாட்டில் 27 ஐ.பி.எஸ். அதிகாரிகள் பணியிட மாற்றம்!

## தமிழ்நாடு அரசு உத்தரவு!

சென்னை, ஆக.5-
தமிழ்நாட்டில் 27 ஐ.பி. எஸ். அதிகாரிகளை பணியிட மாற்றம் செய்து தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது.

அதன்படி, தென்மண்டல ஐ.ஜி. அஸ்ரா கார்க், சென்னை வடக்கு சட்டம் ஒழுங்கு கூடுதல் ஆணையராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

பொருளாதார குற்றப்பிரிவு ஐ.ஜி. ஆசியம்மாள் சென்னை தலைமையக ஐ.ஜி.யாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

திருச்சி காவல் ஆணையர் சத்யப்பிரியா, பொருளாதார குற்றப்பிரிவு ஐ.ஜி. யாக நியமிக்கப்பட்டுள்ளார்.

மேற்கு மண்டல ஐ.ஜி. சுதாகர், சென்னை போக்குவரத்து கூடுதல் ஆணையராக நியமனம்.

காஞ்சிபுரம் டி.ஐ.ஜி. பகலவன், திருச்சிக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

பொருளாதார குற்றப்பிரிவு ஏ.டி.ஜி.பி. யாக பால நாகதேவி நியமிக்கப்பட்டுள்ளார்.

மத்திய அரசு பணியில் இருந்து திரும்பிய ராஜீவ் குமார், சென்னை காவலர் பயிற்சி கல்லூரி டி.ஜி.பி. யாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

திருச்சி காவல் ஆணையராக காமினி, மதுரை காவல் ஆணையராக லோகநாதன் உள்ளிட்ட 27 ஐ.பி.எஸ். அதிகாரிகள் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

## சென்னை வடகிழக்கு மாவட்டம்

# திருவொற்றியூர் கிழக்குப் பகுதி வட்டச் செயலாளர்கள் கூட்டம்!

## பகுதிச் செயலாளர் தி.மு.தனியரசு வேண்டுகோள்!

சென்னை, ஆக.5-
சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்குப் பகுதி வட்ட செயலாளர்கள் அவசர ஆலோசனைக்கூட்டம் நடைபெறுகிறது என பகுதிச் செயலாளர் தி.மு.தனியரசு தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. ஆலோசனையின் படி திருவொற்றியூர் கிழக்குப் பகுதி வட்டச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (5.8.2023, சனிக்கிழமை) மாலை 6 மணிக்கு எண் 58, சன்னதி தெருவில் அமைந்துள்ள பகுதி கழக அலுவலகத்தில் திருவொற்றியூர் கிழக்கு பகுதி அவைத்தலைவர் ஆர். சி.ஆசைதம்பி தலைமையில் நடைபெறுகிறது.

இதில் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர், மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், செயற்குழு உறுப்பினர்கள், பகுதிக் கழக நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட, பகுதி, வட்ட அணியின் நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாள், கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு பகுதிக் கழகச் செயலாளரும், மண்டலக் குழுத் தலைவருமான தி.மு. தனியரசு கேட்டுக் கொண்டுள்ளார்.

## முத்தமிழறிஞர் கலைஞர் 5-ஆம் ஆண்டு நினைவு நாள்:

# திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்தில் ஆகஸ்ட் 7 அன்று நலத்திட்ட உதவிகள்!

## மாவட்டக் கழக செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!



திருவள்ளூர், ஆக.5-
திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் ஐந்தாம் ஆண்டு நினைவுநாளை முன்னிட்டு திருவள்ளூர் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், கும்முடிப் பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழினத் தலைவர் அவர்கள் 5 முறை தமிழக முதல்வராகப் பொறுப் பேற்று அடித்தட்டு மக்களுக்கும், விவசாயிகளுக்கும், ஏழைகளுக்கும் பல்வேறு தரப்பு மக்கள் பயன்பெறும் வகையில் சமுக நலத்திட்டங்களை நிறைவேற்றித் தந்தவர் தலைவர் கலைஞர். எண்பது ஆண்டு காலம் பொது வாழ்க்கைக்கு சொந்தக்கரார், சட்டமன்ற வரலாற்றில் போட்டியிட்ட 11 முறையும் வெற்றி வாகை சூடியத் தலைவர்.

2008-ல் ஆண்டு பொது விநியோக திட்டத்தில் 1 கிலோ அரிசி 1ரூபாய்க்கு வழங்கும் திட்டத்தை கொண்டு வந்தவர் தலைவர் கலைஞர். 2009-ல் கலைஞர் காப்பீட்டு திட்டம் மூலம் மருத்துவமனைகளில் ஏற்படும் செலவை அரசே ஏற்கும் வகையில் திட்டம் வகுத்தவர் தலைவர் கலைஞர். அரசு வேலைவாய்ப்பில் மகளிருக்கு 30 சதவித இட ஒதுக்கீடு, உள்ளாட்சித் துறையில் 33 சதவீத இட ஒதுக்கீடு தந்து மகளிர் முன்னேற்றத்திற்கான பல்வேறு சமுக நலன் சார்ந்த திட்டத்தை கொண்டு வந்தவர், மகளிர் முன்னேற மகளிர் சுய உதவிக்குழுக்களை உருவாக்கியவர் தலைவர் கலைஞர்.

சமுக நீதிக் காவலர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் ஐந்தாம் ஆண்டு நினைவு நாளான வருகிற ஆகஸ்ட் 07.08.2023 திங்கள்கிழமை அன்று முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுக்கு புகழுஞ்சலி செலுத்தும் விதமாக திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர், கிளை வார்டு தோறும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலரஞ்சலி செலுத்தியும், பொது மக்களுக்கு மரக்கன்றுகள் வழங்கியும், ஆதரவற்றோர் இல்லங்களில் அறுசுவை உணவு வழங்கியும், தூய்மைப் பணியாளர்களுக்கு ஆடைகளை வழங்கியும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் புகழுக்கு பெருமை சேர்ப்போம்.

அது சமயம் தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாநில, மாவட்ட நிர்வாகிகள் ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், வார்டு கிளை செயலாளர்கள், பல்வேறு அணிகளின் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வார்டு கிளை, பேரூர் கிளை, ஊர் கிளை, உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் உள்ளிட்ட கழக இந்நாள், முன்னாள், நிர்வாகிகள் அனைவரும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஐந்தாம் ஆண்டு நினைவு நாளில் தலைவரின் புகழுக்கு பெருமை சேர்க்கும் வண்ணம் மேற்கண்ட நினைவு நாள் நிகழ்ச்சியினை நடத்திட வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.



7வது ஹீரோ ஆசிய ஆடவர் ஆக்கி விளையாட்டுப் போட்டிகள் சென்னையில் நடைபெறுவதை முன்னிட்டு திருவள்ளூர் மாவட்டம் ஆவடி மாநகராட்சி ஆவடி பேருந்து நிலையத்தில் விளையாட்டு மேம்பாட்டு துறை சார்பாக ஆக்கி போட்டியை மொபைல் வாகன மூலம் பொதுமக்கள்மற்றும் பேருந்து பயணிகள் பார்வைக்காக திரையிட்டதை முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ பேருந்து நிலையத்தில் அமர்ந்து போட்டியை பார்வையிட்டார். அருகில் ஆவடி மாநகராட்சி மேயர் ஜி.உதயகுமார், மாநகராட்சி ஆணையர் தர்ப்பகராஜ், மற்றும்மண்டல குழு தலைவர்கள் மாநகர பகுதி கழக செயலாளர்கள் மாமன்ற உறுப்பினர்கள் அதிகாரிகள் பொதுமக்கள் உள்ளனர்

## சேப்பாக்கம் பகுதியில்

# முத்தமிழறிஞர் கலைஞர் 5-ஆம் ஆண்டு நினைவு நாள்!

## பகுதிச் செயலாளர் எஸ்.மதன்மோகன் அறிக்கை!

சென்னை, ஆக.5-
சேப்பாக்கம் பகுதிக் கழகச் செயலாளரும், 9-வது மண்டலக் குழுத்தலைவருமான எஸ். மதன்மோகன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 5-ஆம் ஆண்டு நினைவு தினம் வருகின்ற 7.8.2023 திங்கள் அன்று ஆகும். இத்தினத்தில் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் புகழை போற்றும் வகையில் வட்டக் கழக அலுவலகங்கள், கிளைக் கழக அலுவலகங்களில் கழக நிர்வாகிகள் அனைவரும் அவரது திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தி அவரது புகழ் ஓங்கிட செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

**கழகத் தலைவர் தலைமையில் அமைதிப் பேரணி!**

மேலும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 5-ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு 7.8.2023 அன்று காலை 8 மணிக்கு ஓமந்தூரரார் அரசினர் தோட்ட வளாகத்தில் உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலை அருகில் இருந்து கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் அமைதிப் பேரணி தொடங்கி மெரீனாவில் உள்ள கலைஞர் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து மரியாதைச் செலுத்தப்படுகின்றது.

எனவே இந்நிகழ்ச்சியில் சேப்பாக்கம் பகுதியைச் சேர்ந்த கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில, மாவட்ட, பகுதி வட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட கழகத் தோழர்கள் அனைவரும் திரளாகப் பங்கேற்றிட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு பகுதிக் கழகச் செயலாளர் எஸ்.மதன்மோகன் அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

# சென்னை தென் மேற்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. அறிவிப்பு!



சென்னை தென்மேற்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் இன்று (5-8-2023, சனிக்கிழமை) மாலை 6 மணியளவில் சி.பி.ராமசாமி சாலையில் உள்ள அலுவலகத்தில் மாவட்ட அவைத்தலைவர்அ.சந்திரசேகர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர் மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், பகுதிச் செயலாளர்கள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மற்றும் அணிகளை சார்ந்த மாவட்ட அமைப்பாளர்கள், தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுகொள்கிறேன்.

பொருள்: முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 5-ஆம் ஆண்டு நினைவு நாள் பேரணி, கழக ஆக்கப்பணிகள்.

**மயிலை த.வேலு எம்.எல்.ஏ.**
செயலாளர், சென்னை தென்மேற்கு மாவட்ட தி.மு.க.

## ரூ. 8 லட்சத்தில் - மானாமதுரை அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி

# நீண்ட நாள் கோரிக்கையான சைக்கிள் நிறுத்தம்!

## ஆர். தமிழரசி எம். எல். ஏ. திறந்து வைத்தார்!

சிவகங்கை, ஆக. 5 -
சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி உள்ளது .இப்பள்ளியில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவிகள் படித்து வருகிறார்கள். இவர்கள் தங்களது இருசக்கர வாகனங்களைபாதுகாப்பாக நிறுத்துவதற்கான இட வசதி இல்லை என்றும் நிழற்குடை ஏற்படுத்தி தருமாறு சட்டமன்ற உறுப்பினர் திருமதி தமிழரசிரவிக்குமாரிடம் கோரிக்கை வைத்தார்கள்.


அதனை ஏற்று திருமதிதமிழரசி ரவிக்குமார் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 8 லட்சத்து 14 ஆயிரம் செலவில் சைக்கிள் நிறுத்தம் மற்றும் கழிப்பறைகள் கட்டுவதற்கு நிதிஒதுக்கி பணிகள் முடிவடைந்தது. புதிதாக கட்டப்பட்ட சைக்கிள் நிறுத்த அரங்கினை திருமதி தமிழரசிரவிக்குமார் திறந்து வைத்து சிறப்புரை ஆற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் மானாமதுரை நகர் கழக செயலாளர் க.பொன்னுச்சாமி ஒன்றிய செயலாளர் துரை. ராஜாமணி நகர் மன்ற துணைத்தலைவர் பாலசுந்தர் நகராட்சி கவுன்சிலர் இந்து மதி , அவைத் தலைவர் ரவிச்சந்திரன், ஊராட்சி மன்ற தலைவர்கள் முருகவள்ளி, தேசிங்குராஜா, நெடுஞ்சாலை துறை கோட்டப் பொறியாளர்கள் மு.சந்திரசேகர், திருமதி பாக்கியலட்சுமி, சிவக்குமார், வார்டு செயலாளர் திருமுருகன் மற்றும் பள்ளி தலைமை ஆசிரியர் லதா, சசி பிரசாத், சதீஷ், சீனிவாசன், மற்றும் ஆசிரியர் ஆசிரியர்கள் மாணவ - மாணவிகள் கலந்து கொண்டார்கள். நீண்ட நாள் கோரிக்கையான தங்களுக்கு சைக்கிள் பேருந்து நிறுத்தம் நிழற்குடை அமைத்துக் கொடுத்ததற்காக தமிழரசி எம்.எல்.ஏ.விற்கு மாணவிகள் மேடையில் நன்றி தெரிவித்தார்கள்.

## பூண்டி மேற்கு ஒன்றிய அவைத்தலைவர்

# கே.பாஸ்கரன் தாயார் சகுந்தலம் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!



திருவள்ளூர், ஆக.5-
திருவள்ளூர் மேற்கு மாவட்டம் பூண்டி மேற்கு ஒன்றிய அவை தலைவர் பட்டரை கே.பாஸ்கரன் தாயாரும், ஒன்றிய கவுன்சிலர் சுபாஷினி பாஸ்கரன் மாமியாருமான கே.சகுந்தலம்மாள் உடல் நலக்குறைவால் நேற்று வெள்ளிக்கிழமை மாலை 3 மணி அளவில் இயற்கை எய்தினார்.

தகவல் அறிந்த கழகத்தினர்கள் நேரில் சென்று இறுதி அஞ்சலி செலுத்தினார்கள் அன்னாரின் இறுதி ஊர்வலம் இன்று 05-08-2023 சனிக்கிழமை மாலை 3 மணியளவில் பட்டறை பெருமந்தூர் இல்லத்தில் இருந்து புறப்பட்டு இடுகாட்டில் நல்லடக்கம் நடைபெற உள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பொன். கோவிந்தராஜன்
### ஆகஸ்ட் 5 (2020)



இளமைக் காலம் முதலே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.

நீடாமங்கலம் பேரூர்ச் செயலாளர், ஒன்றிய அவைத்தலைவர் என பொறுப்புகள் வகித்து அப்பகுதியில் கழக வளரப் பாடுபட்டவர்.


நீடாமங்கலம் பேரூராட்சித் தலைவர், நீடாமங்கலம் கூட்டுறவு வங்கித் தலைவர் ஆகிய பதவிகள் வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அ.த.தங்கமுத்து
### ஆகஸ்ட் 5 (1998)



தனது இளமைப் பருவத்திலேயே கழகத்தில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.

திருச்சி மாவட்டம், மணிகண்டம் ஒன்றியக் கழகச் செயலாளராக மூன்று முறை பொறுப்பு வகித்து ஒன்றியத்தில் கழகம் வளர பாடுபட்டவர்.

உய்யக்கொண்டான் திருமலை தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத் தலைவராக பொறுப்பு வகித்தவர்.

இந்திமொழி எதிர்ப்பு போராட்டம் – இலங்கைத் தமிழர் ஆதரவு போராட்டம் என கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்றதோடு, நெருக்கடி நிலையின் போது, மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**